24.07.2019
O.S.No.112/2018

வா. சா. 1 கணேசன் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் எம்பிபிஎஸ்.படித்த மருத்துவர். 25 வருடங்களாக நான் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். என் பேரில் வணிக வளாகங்கள் உள்ளது என்றால் சரிதான். சொத்துக்களும் என் பேரில் நிறைய இருக்கிறது என்றால் சரிதான். வாடகை ஒப்பந்தம் போடமாட்டேன். நோட்டில் எழுதிக்கொள்வோம். 11 மாதத்திற்கு மேல் போடப்படும் ஒப்பந்தம், வாடகை ஒப்பந்தம் பதிவு செய்யப்படவேண்டும் என்றால் தெரியாது. நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சசிக்குமாருக்கு எழுதிக்கொடுத்த குத்தகை ஒப்பந்தம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். சதீஷ்குமாருக்கு வாதசாஆ.4 மூலம் 15.11.2011 ம் தேதி பொது அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுத்தபோது குத்தகை பற்றி அதில் எந்த விவரமும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாதசாஆ.4 படி எல்லா அதிகாரமும் கொடுத்துதான் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. கடன் பெறுவதற்காக கொடுக்கப்பட்டது. வாதசாஆ.4 ல் கடன் பெறுவதற்காக என்ற வாசகம் இல்லை என்றால் தெரியாது. அனைத்து நிதி நிறுவனங்களும் இதுமாதிரியாகத்தான் எழுதி வாங்குவார்கள். அதே போல் நான் எழுதி கொடுத்தேன். 1 ம் பிரதிவாதி சதீஷ்குமாரை எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதிக்கு நான்தான் பொது அதிகாரம் பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி யார் என்று தெரியாத நிலையில் நான் இந்த பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தேன். பார்த்தசாரதி எனக்கு கடன் தருவதாகச் சொல்லி வாதசாஆ.4 பொது அதிகார பத்திரத்தில் கையெழுத்து பெற்றார்கள். பார்த்தசாரதி திண்டுக்கல்காரர். பார்த்தசாரதி சொத்துக்களை வாங்கி விற்கும் தொழிலை செய்பவர். என்னிடம் சொத்துக்களை வாங்கி விற்றுள்ளார். பார்த்தசாரதி இந்த வழக்கில் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். நான் 13.8.2014 தேதியிட்ட கிரைய பத்திர ஆவண எண்.3908 மற்றும் 3909/2004 ஐ

ரத்து செய்யும்படி உயர்நீதிமன்றத்தில் பேராய மனு எண்.3223/2018 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் பார்த்தசாரதியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பார்த்தசாரதி மீது நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதசாஆ.4 ன்படி சதீஷ்குமார் தான் பொது அதிகாரம் பெற்ற முகவர் என்றால் சரிதான். அதிகார பத்திரம் நிலுவையில் இருக்கும்போது சதீஷ்குமார் 3,4 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து உள்ளார் என்றால் சரிதான். 2017 ம் வருடத்தில் வில்லங்கம் பார்த்த போதுதான் தெரியவந்தது. மேற்படி கிரையப்படி பட்டா அவர்கள் பேருக்கு மாறியது என்றால் தெரியாது. சொத்துக்கள் 3,4 பிரதிவாதிகள் சுவாதீனத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு மருத்துவ தொழில்தான் நிரந்தரமானது என்றால் சரிதான். வாதசாஆ.4 எழுதிக்கொடுத்தது முதல் ரத்து செய்யும் வரை நான் திண்டுக்கல்லில் தான் வசித்து தொழில் செய்து வந்தேன். 2014 ல் ஏப்ரல், மே மாதத்தில் நான் மதுரை சிறைச்சாலையில் என்னுடைய மனைவி தற்கொலை செய்த வழக்கில் இருந்தேன். வாதசாஆ.6 பவர் ரத்து பத்திரத்தில் பொது அதிகார ஆவணம் ரத்து செய்யப்படுவதை முகவர் அவர்களுக்கு தெரியப்படுத்தியதாக வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். முகவருக்கு தெரியப்படுத்தியதாக ஆவணம் நீமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. மேலும் அதில் உள்ளூரில் வசித்து வருவதால் ரத்து செய்கிறேன் என்று வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். நான் எப்போதும் உள்ளூரில்தான் வசித்து வருகிறேன் என்றும் எந்த காலத்திலும் வெளியூருக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அதிகார பத்திரம் ரத்து செய்வதற்கான காரணம் சொன்னது தவறானவை என்றால் சரியல்ல. என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் தாளில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள கையெழுத்து மட்டும் பிவாசாஆ.1. அதில் உள்ள வாசகங்கள் எனக்கு தெரியாது. அதில் கண்டவாறு நான் முதல் பிரதிவாதிக்கு ரசீது கொடுத்தேனா என்றால் இல்லை. சதீஷ்குமார் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்துப் பார்க்கவில்லை. 1 ம் பிரதிவாதி தன்னுடைய எதிர்வழக்குரையில் என்னிடம் கணக்கு ஒப்படைத்ததாகவும் அதற்கு

ரசீது பெற்றதாகவும் சொல்லி உள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த விவரம் எனக்கு தெரியும் என்பதால் பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ரசீதை வழங்கிவிட்டு பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சதீஷ்குமார் என்னை ஏமாற்றி மோசடியாக கிரையம் செய்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். உயர்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த மனுவில் 1 ம் பிரதிவாதி பவர் பத்திரத்தின் அடிப்படையில் செய்த கிரையம் செல்லும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உரிமையியல் நீதிமன்றத்தை அணுகும்படி அறிவுறுத்தப்பட்டேன். வாதசாஆ.16 புகாரின் பேரில் போலீசார் விசாரித்து அறிக்கை கொடுத்தார்கள் என்றால் அந்த அறிக்கையில் எதிர்மனுதாரர்கள் பணம் கொடுத்து பவர் பெற்று கிரைய அக்ரிமெண்ட் செய்ததால் மேற்படி நிலத்தை திரும்பப் பெறும் நோக்கத்தில் தங்களை எதிர்தரப்பினர்கள் மிரட்டியதாக தெரிவித்துள்ளீர். அதற்கு சாட்சியமோ ஆதாரமோ இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் எதிர்மனுதாரர்கள் அந்த இடத்திற்கு வரவேயில்லை என்ற அடிப்படையில் அறிக்கை கொடுத்து உள்ளார்கள். பிரதிவாதிகள் எந்தக்காலத்திலும் மிரட்டவேயில்லை என்றும் நான்தான் உண்மை தெரியும் முன்பே கோர்ட்டில் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டேன் என்றால் சரியல்ல. வாதசாஆ.17 ல் 1.2.2013 அன்றோ அதற்கு பின்போ அதிகாரம் பெற்ற முகவரின் வாழ்வு சான்றிதழ் பெறவேண்டிய அவசியமில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தை குழப்பவேண்டும் என்பதற்காகவே முன்னுக்குப் பின் முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பார்த்தசாரதியை தரப்பினராக சேர்க்கவில்லை. அதனால் நான் அவருடன் வஞ்சகக் கூட்டு வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சசிக்குமார் என்பவருக்கு குத்தகைக்கு விட்டதாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதசாஆ.4 பவர் பத்திரம் மற்றும் வாதசாஆ.16 காவல் புகாரில் நான் சசிக்குமாருக்கு குத்தகைக்கு விட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Sd.M.K.Jamuna,
Prl.District Judge,
Dindigul